RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 87 | ஏப்ரல்.5 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ‘6ம் வகுப்பில் இருந்து இனி மும்மொழிக் கொள்கை’ சிபிஎஸ்இ அறிவிப்புக்கு ஸ்டாலின் கண்டனம்

சென்னை: ஏப்.5-

மும்மொழிக் கொள்கை என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியாகும் என முதல்வர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், “தேசியக் கல்விக் கொள்கை 2020 ஐச் சார்ந்து, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிபிஎஸ்இ பாடத்திட்டம் என்பது சாதாரண கல்விச் சீர்திருத்தம் அல்ல; அது மொழித் திணிப்பை நோக்கிய, நாம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் வகையிலான, நன்கு திட்டமிடப்பட்ட ஆழ்ந்த கவலைக்குரிய முயற்சியாகும்.

“இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம்” என்ற போர்வையில், இந்தியாவின் செழுமையான மற்றும் பன்மைத்துவம் நிறைந்த மொழிப் பாரம்பரியத்தைத் திட்டமிட்டு ஒதுக்கி, இந்திக்கு முன்னுரிமை அளித்து மையப்படுத்தும் செயலை அரசியல் நோக்கத்துடன் பா.ஜ.க. தலைமையிலான என் டி ஏ அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. “மும்மொழிக் கொள்கை” என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியாகும்.

தென் மாநில மாணவர்களைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம், கட்டாய இந்தி என்பதைக் கடந்து வேறேதுமில்லை. இருப்பினும், இதில் ஒருவருக்கொருவர் இடையிலான பரிமாற்றம் எங்கே இருக்கிறது? இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் அல்லது வங்கம், மராத்தி உள்ளிட்ட மொழிகளைக் கட்டாயமாகப் படிப்பார்களா? இதுகுறித்த தெளிவின்மை, இதிலுள்ள ஒருசார்பையும் பாகுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.



இந்த முரண் வெளிப்படையானது, இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழைக் கட்டாயமாக்க முடியாத தொடர்ச்சியாகப் போதிய தமிழாசிரியர்களை நியமிக்கத் தவறிய இதே ஒன்றிய அரசு, இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம் என்று மாநிலங்களுக்குப் பாடம் எடுக்க நினைக்கிறது. இது பொறுப்புணர்வல்ல; கபட நாடகத்தின் உச்சம்.

ஆசிரியர்களின் எண்ணிக்கை, போதிய பயிற்சிக்கான திறன் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவை குறித்த உண்மைக் களநிலவரத்தை ஒன்றிய அரசு உணர்ந்திருக்கிறதா? இந்தச் செயல்திட்டத்தை அமல்படுத்த தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் எங்கே இருக்கிறார்கள்? கல்வித் துறையில் மிகப்பெரிய சுமையை ஏற்படுத்தும் இந்த நகர்வுக்கான நிதி ஆதாரம் எங்குள்ளது? எவ்விதத் திட்டமிடலும், வளங்களும், பொறுப்பும் இல்லாத உள்நோக்கம் கொண்ட மற்றுமோர் திட்டமாகவே இது தோன்றுகிறது.

இது மொழி குறித்த கேள்வி மட்டுமல்ல; நியாயம், கூட்டாட்சி மற்றும் சமவாய்ப்புகள் குறித்த கேள்விகளுமாகும். இந்தி பேசும் மாணவர்களைக் கட்டமைப்புரீதியான சலுகைகளை அளித்து, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் அவர்களுக்கு ஆதாயம் ஏற்படுத்துவதோடு, மாநிலங்களுக்கிடையே மேலும் ஏற்றத்தாழ்வுகளையே இது உண்டாக்கும்.

முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் முன்னோக்கி நகரும் வேளையில், நம் குழந்தைகள் எதிர்காலத்திற்காகத் தயாராக இருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு, அனிமேஷன் விஷுவல் எஃபக்ட்ஸ் கேமிங் காமிக்ஸ் உள்ளிட்ட துறைகளில் அவர்களது திறனை மேம்படுத்தி, அவர்களது அறிவியல் பார்வையையும் திறனாய்வுச் சிந்தனையையும் ஊக்குவிக்க வேண்டும். மாறாக, இத்தகைய பிற்போக்குத்தனமான, இறுக்கமான மொழிச் சுமை அவர்களது முன்னேற்றத்தைத் தடுப்பதாக உள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் தொடர்ச்சியாக எழுப்பிய நியாயமான ஜனநாயகப்பூர்வமான கவலைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்தியைத் திணிப்பதில் ஒன்றிய அரசு மும்முரமாக இருப்பது தெரிகிறது. இந்தச் செயல், கூட்டுறவுக் கூட்டாட்சியியலுக்கு எதிரானது, கோடிக்கணக்கான இந்தியர்களின் மொழி அடையாளங்களை நேரடியாக அவமதிக்கும் செயல்.

இந்தியாவின் வலிமை என்பது, பன்முகத்தன்மையில்தான் இருக்கிறதே தவிர, திணிக்கப்படும் ஒற்றைத்தன்மையில் இல்லை. இந்தச் சமநிலையைக் குலைக்கும் எத்தகைய முயற்சிகளும் தவறானவை மட்டுமல்ல, ஆபத்தானதுமாகும். நம் நாட்டின் அடிப்படையான பன்மைத்துவத்தையே தாக்கும் இத்தகைய கொள்கைகள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியவையாகும். பழனிசாமி தலைமையிலான அதிமுகவும், அதன் என் டி ஏ கூட்டணிக் கட்சிகளும் இந்தத் திணிப்பை ஏற்றுக்கொள்கின்றனரா? அல்லது நமது மாணவர்களின் எதிர்காலம், அடையாளம் மற்றும் உரிமைகளுக்காக ஒரே ஒரு முறையாவது முதுகெலும்போடு எதிர்ப்பார்களா?” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

202627ம் கல்வியாண்டு முதல் தேசிய கல்விக் கொள்கையின்படி பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் மும்மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் என்று சிபிஎஸ்இ அறிவித்துள்ள நிலையில், மு.க. ஸ்டாலின் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.



■ சிவகங்கையில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட செந்தில்நாதன் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அதிகாரியிடம் மனு அளித்தார். கூட்டணி நிர்வாகிகள் உடன் சிவகங்கை முன்னாள் பாஜக மாவட்ட தலைவர் மேப்பல் சக்தி (எ) சத்தியநாதன் மற்றும் நிர்வாகிகள் இருந்தனர். பின்னர் மக்களின் ஆதரவை கோரினார்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட இளங்கோவன் நேற்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். மானாமதுரை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரியிடம் மனுவை அளித்தார். கட்சி நிர்வாகிகள் மற்றும் ஆதரவாளர்கள் உடன் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பழைய யூனியன் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் சைகை மொழியில் உறுதிமொழி எடுத்தனர். முதல்முறை வாக்காளர்கள் கௌரவிக்கப்பட்டனர். கலைநிகழ்ச்சிகள், பேரணி, கையெழுத்து இயக்கம் மூலம் “நிச்சயம் வாக்களிப்போம்” என பொதுமக்கள் உறுதி பெற்றனர்.





## சிவகங்கையில் உதயநிதி ஸ்டாலின் தீவிர வாக்கு சேகரிப்பு: “பாசிச பாஜகவின் கனவு ஒருபோதும் பலிக்காது” என சூளுரை

சிவகங்கை: ஏப்.5-

சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் முக்குலத்தோர் புலிப்படை கட்சித் தலைவர் கருணாஸை ஆதரித்து, தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிவகங்கையில் பிரம்மாண்ட தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்.

திராவிட மாடல் அரசின் சாதனைகள்

பொதுமக்களிடையே உரையாற்றிய உதயநிதி ஸ்டாலின், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிற்கும் ஏதோ ஒரு வகையில் பயனளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்தி உள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

"வீடுதோறும் பயனாளிகளை உருவாக்கி இருக்கும் அரசு இது. மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண் திட்டம் எனப் பல புரட்சிகரமான திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளோம். இந்தச் சாதனைகளே நமது வெற்றியை உறுதிப்படுத்தும்," என அவர் பேசினார்.

பாஜகவிற்கு கடும் கண்டனம்

மத்திய அரசைச் சாடிப் பேசிய அவர், "டெல்லியில் அமர்ந்து கொண்டு தமிழ்நாட்டை ரிமோட் கண்ட்ரோல் (Remote Control) மூலம் ஆள நினைக்கும் பாசிச பாஜகவின் கனவு ஒருநாளும் பலிக்காது. தமிழக மக்கள் உரிமை உணர்வு மிக்கவர்கள், அவர்கள் ஒருபோதும் அடிமைத்தனத்தை ஏற்கமாட்டார்கள்," என சிவகங்கை மண்ணில் ஆவேசமாகச் சூளுரைத்தார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற முக்கியப் பிரமுகர்கள்

இந்த எழுச்சிமிகு தேர்தல் பரப்புரையில் சிவகங்கை மாவட்டத்தின் முக்கிய நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்:

* பெரிய கருப்பன்: சிவகங்கை மாவட்டச் செயலாளர் மற்றும் அமைச்சர்.

* தென்னவன்: இலக்கிய அணிச் செயலாளர்.

* தமிழரசி ரவிக்குமார்: மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்.

* துறை ராஜாமணி: மானாமதுரை கிழக்கு ஒன்றியச் செயலாளர். சிவகங்கை நகர்மன்ற உறுப்பினர் துறை ஆனந்த்*

* ஜெயராமன்: சிவகங்கை தெற்கு ஒன்றியச் செயலாளர்.

தொண்டர்களின் உற்சாக முழக்கங்களுக்கு இடையே நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தொகுதி மக்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர். திராவிட மாடல் ஆட்சியின் தொடர் வெற்றிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என உதயநிதி ஸ்டாலின் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்



# ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியத்தில் தொகுதி வேட்பாளர் அறிமுக கூட்டம்

ஜோலார்பேட்டை : ஏப். 5-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் வெட்டப்பட்டு, மூக்கனூர், புள்ளாநேரி, திரியாலம் ஊராட்சிகளில்

ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் அறிமுக கூட்டம் ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.கே.சதீஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் சத்தியநாராயணன் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கவிதா தண்டபாணி அறிமுக கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் ஜோலார்பேட்டை ஒன்றிய குழு துணை தலைவர் ஸ்ரீதேவி காந்தி, கூட்டணி கட்சியான தேமுதிக மாவட்ட அவை தலைவர் பையாஸ் பாஷா, ஆஞ்சி, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்



■ நிலக்கோட்டையில் கனிமொழி எம்பி பிரச்சாரம் நிலக்கோட்டை தனி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் நாகஜோதி போட்டியிடுகிறார் அவரை ஆதரித்து திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்பி நிலக்கோட்டை பஸ் நிலையம் பகுதியில் பிரச்சாரம் செய்தார் ஒன்றிய செயலாளர் மணிகண்டன் ஒன்றிய செயலாளர் கரிகால பாண்டியன் ஒன்றிய செயலாளர் கனி குமார் ஒன்றிய செயலாளர் சௌந்தரபாண்டி ஒன்றிய செயலாளர் கே பி முருகன் ஒன்றிய செயலாளர் கனகதுறை நிலவை நகர செயலாளர் ஜோசப் கோவில் பிள்ளை நிலவை ஒன்றிய துணைச் செயலாளர் வெள்ளிமலை மற்றும் ஏராளமான கலந்து கொண்டனர்



■ ராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூர் மதகணையில் இருந்து விவசாயிகளுக்கு நீர் பாசனத்திற்காக செல்லும் கால்வாய்கள் தூர்வாரப்பட்டு தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டு வருகிறது ஆனால் இந்த தடுப்பு சுவர்கள் போலியாக கட்டப்படுவதாக இதில் முறையான சிமெண்ட் கம்பி ஜல்லிக்கட்டுக்கள் பயன்படுத்தவில்லை எனவும் ஒரு வருடத்திற்கே தாங்காத நிலைமையில் உள்ளதாக இப்பகுதி விவசாயிகள் குற்றம் சாட்டி வருகின்றனர் தமிழக அரசு தடுப்பணை சுவர்களை ஆய்வுக்கு உட்படுத்தி முறையாக தடுப்பணை கட்டவும் கண்டுகொள்ளாத அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது



# திருப்பத்தூர் தொகுதி தவேக வேட்பாளர் வேட்புமனு தாக்கல் செய்தார்

திருப்பத்தூர் : ஏப். 05-

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் டாக்டர் திருப்பதி இன்று திருப்பத்தூர் கிருஷ்ணா சில்க்ஸ் முதல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் வரை மேளதாளங்களுடன் அமோக வரவேற்புடன் ஊர்வலமாக சென்று வருவாய் கோட்டாட்சியரும் தேர்தல் அலுவலருமான வரதராஜனிடம் தனது வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் கழக உறுப்பினர்கள் இருந்தனர்.

# வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியத்தில் திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனம் தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.5-

திருவள்ளூர் மாவட்டம்,மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளர் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சனம் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பம்மதுகுளம் , பொத்தூர் , வெள்ளானூர் ஆகிய ஊராட்சிகளில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் கோ. தயாளன் தலைமையில் திறந்த வேனில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர்.பின்னர் பம்மதுகுளம் ஊராட்சியில் அன்னை இந்திரா நகரில் வழக்கறிஞர் அணி





தலைவர் வழக்கறிஞர் கமல்ராஜ், ஈஸ்வரன்நகரில் வழக்கறிஞர் தேவராஜ், கோணிமேடு ரவுண்டானாவில் இளைஞரணி நிர்வாகி வடிவேல், கோணிமேடு விவசாய அணி அமைப்பாளர் சங்கர், பொத்தூர் ஊராட்சியில் விசிக நிர்வாகி பத்மநாபன், திமுக ஒன்றிய துணை செயலாளர் தேவிமாரி, ஜெயலட்சுமி நகரில் கிளை செயலாளர் சந்திரன் மற்றும் உப்பரப்பாளையம் கிளை செயலாளர் சந்தானம், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கண்ணன், கண்ணடப்பாளையம் கிளை செயலாளர் சன்தேவன், ஆரிக்கம்பேடு ஒன்றிய துணை செயலாளர் ராமதாஸ், கோவிந்தராஜ், வெள்ளானூரில் முன்னாள் வெள்ளானூர் ஊராட்சி மன்ற தலைவர் பிரபாகரன், வெள்ளானூரில் ஒன்றிய துணை செயலாளர் குணாதகவர்னர், கொள்ளுமேடு மணிமாறன் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனத்திற்கு பட்டாசு வெடித்து பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து மலர்கள் தூவி ஆரத்தி எடுத்து உற்சாகமாக வரவேற்பு அளித்தனர். இதில் தேமுதிக மாவட்ட செயலாளர் டில்லி, தேமுதிக வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் மோரை பாலு,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சதீஷ்குமார், முன்னாள் மோரை ஊராட்சி மன்ற தலைவர் திவாகரன், இளைஞரணி துணை அமைப்பாளர் இளம்பருதி, டீபன் உட்பட நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.





■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியம் கீழ் பையூர் கிராமத்தில் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அசோக் குமார் இரட்டை இலை சின்னத்திற்கு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். மேற்கு ஒன்றிய செயலாளர் பையூர் ரவி,மாவட்ட விவசாய அணி மோகன் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் அதிமுகவினர் பலர் கலந்து கொண்டனர்.





■ பர்கூர் தொகுதியில் திமுக வேட்பாளர் மதியழகன் தீவிர தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அகரம், அகரம் கூட்ரோடு, அகரம் (அஞ்சல் அலுவலகம்), குடிமேனஅள்ளி, தேவீரஹள்ளி உள்ளிட்ட பல ஊராட்சிகளில் கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகளுடன் இணைந்து பொதுமக்களை சந்தித்து, “உதயசூரியன்” சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.கூட்டணி கட்சிகளின் ஒத்துழைப்புடன் மாபெரும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியம், தளிஹள்ளி, கோவிலூர், கீங்கன்கொட்டாய், சின்னதளிஹள்ளி, பெரியதளிஹள்ளி, பெண்னேஸ்வரமடம் உள்ளிட்ட கிராமங்களில் பர்கூர் தொகுதி வேட்பாளர் மதியழகன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.




■ கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி பெத்த சிகரலப்பள்ளி ஊராட்சியில் வேப்பனப்பள்ளி தொகுதி வேட்பாளர் கே. பி. முனுசாமி அவர்கள் வாக்குகள் சேகரித்தார். ஒன்றிய செயலாளர் பாபு (எ) வெங்கடாசலம்,பாரதிய ஜனதா கட்சி அன்பரசு உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய சார்பில் செங்கல்பட்டு தொகுதி திமுக வேட்பாளர் எம் கே டி கார்த்திக் தண்டபாணிக்கு பல்வேறு கிராம நிர்வாகிகள் வரவேற்பு

செங்கல்பட்டு ஏப். 05-

செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் வேட்பாளராக போட்டியிடும் எம்.கேடி கார்த்திக் தண்டபாணி காட்டாங்கொளத் தூர் வடக்கு ஒன்றியத்தில் உள்ள மண்ணிவாக்கம், வண்டலூர், நெடுங்குன்றம், நல்லம்பாக்கம், குமிழி, கல்வாய், காரணைப்புதுச் சேரி, ஊரப்பாக்கம் ஆகிய ஊராட்சிக்கு உட்பட்ட தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சியை சேர்த்த நிர்வா கிகளை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார். அப்போது அங்கு கூடியிருந்த நிர்வாகிகளிடம் தி.மு.க அரசின் சாதனைகள்



மற்றும் பல்வேறு நலத திட்டங்கள் குறித்து எடுத்து கூறி உதயசூரியன் சின்னத் திற்கு வாக்கு சேகரித்தார். அப்போது வேட்பாளர் எம்.கே.டி கார்த்திக் தண்ட பாணிக்கு திமுக மற்றும் கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள், பொதுமக்கள் சால்வை, மாலை அணி வித்து பட்டாசு வெடித்து சிறப்பான வரவேற்பு அளித்தனர். இதில் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் மண்ணிவாக்கம் எம்.டி லோகநாதன், காட்டாங்கொளத்தூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் உதயா கருணாகரன், துணை தலைவர் ஏவிஎம் இளங்கோவன், மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் கெஜலட்சுமிசண்முகம், துணை தலைவர் சுமதிலோகநாதன் வண்ட லூர் ஊராட்சி மன்ற முன் னாள் தலைவர் குணசேகரன், நெடுங்குன்ற ஊராட்சி மன்ற தலைவர் வனிதா ஸ்ரீசீனிவாசன் காரணைப் புதுச்சேரி ஊராட்சி மன்ற தலைவர் நளினி ஜெகன், ஊரப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பவானி கார்த்தி, துணை தலைவர் ரேகா கார்த்திக் உள்ளிட்ட திமுக கூட் டணி கட்சியை சேர்ந்த நிர்வாகங்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



■ கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி வேட்பாளராக முன்னாள் எம்.பி. டாக்டர் செல்லக்குமார் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியினர் உற்சாகமாகக் கொண்டாடினர்.பட்டாசு வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் மகிழ்ச்சி பகிர்ந்தனர்.நகரின் பல்வேறு பகுதிகளில் காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




■ கிருஷ்ணகிரி தூய அன்னை பாத்திமா தேவாலயம் முன்பு புனித வெள்ளியை முன்னிட்டு கிறிஸ்துவ மக்களிடம், கிருஷ்ணகிரி அதிமுக வேட்பாளர் அசோக் குமார் அவர்களுக்கு ஆதரவாக, அதிமுக நகரக் கழக நிர்வாகி நவாப் தலைமையில் கட்சி நிர்வாகிகள் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு மேற்கொண்டனர்.



■ நீலகிரி மாவட்டம்குன்னூர் சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றி கழக வேட்பாளர் சி. தங்கராஜ் குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார்




## வேட்புமனு தாக்கல் செய்தார் தமிழக வெற்றிக்கழகம் கட்சி வேட்பாளர் ராஜசேகர்

பெரம்பலூர், ஏப்.5-

தமிழக வெற்றிக்கழகம் கட்சி வேட்பாளர் ராஜசேகர் திட்டக்குடி தொகுதியில் இன்று (ஏப்ரல் 4) வேட்புமனு தாக்கல் செய்தார். திட்டக்குடி தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அதிகாரி தமிழ்மணியிடம் வேட்புமனுவை தாக்கல் செய்தார். இந்நிலையில், வேட்புமனு தாக்கல் செய்ய தமிழக வெற்றிக்கழகம் கட்சியினர் திட்டக்குடி மகளிர் மேல்நிலைப்பள்ளி இருந்து மேளதாளத்துடன் ஊர்வலமாக புறப்பட்டனர், அவர் வேட்புமனு தாக்கல் செய்யும் நிகழ்வை பிரம்மாண்டமாக அக்கட்சியினர் செய்திருந்தனர். இதில், மாவட்ட பொருளாளர் கண்ணதாசன், மாவட்ட இளைஞரணி வெங்கடேசன், நகர செயலாளர் அசோக் குமார், மாவட்ட மகளிர் அணி அபிபத்மாவதி, ஒன்றிய செயலாளர் நீலகண்டன், மாற்று வேட்பாளர் பஞ்சவர்ணம், ஒன்றிய செயலாளர் (தெற்கு) சீத்தாராமன், மாவட்ட செயற்குழு தலைமை ஜி. ஸீ.முத்து, உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பழனியில் அனைத்து கட்சி வேட்பாளர்கள் தனது வேட்பு மனுவை தேர்தல் அதிகாரியிடம் வழங்கினர்

பழனி ஏப். 5-

திண்டுக்கல் மாவட்டம் பழனி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் சட்டமன்ற வேட்பாளராக தேசிய முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பாண்டி தனது வேட்பு மனுவை மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் வழங்கினார். இதனைத் தொடர்ந்து தமிழக வெற்றி கழகம்



சார்பாக பழனி சட்டமன்ற வேட்பாளர் பிரவீன் தனது வேட்பு மனுவை மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பித்தார்.இதனைத் தொடர்ந்து தேசியக் கூட்டணி சார்பாக அஇஅதிமுகவை சேர்ந்த வேட்பாளர் ரவிமனோகரன் தனது வேட்பு மனுவை மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் வழங்கினார். தொடர்ந்து பழனி சட்டமன்ற தொகுதிக்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 30 ஆம் தேதி தொடங்கி நிலையில் தொடர்ந்து பழனி சட்டமன்ற தொகுதிக்கான வேட்பாளர் தங்களது வேட்பு மனுவினை தேர்தல் அதிகாரியிடம் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் பழனி சட்டமன்றத் தொகுதியில் கூட்டணி கட்சி வேட்பாளர்களும் சுயேச்சை வேட்பாளர்களும் ஆர்வத்துடன் தங்களது வேட்பு மனுவை தாக்கல் செய்து வருகின்றனர்..



■ பாரதிய ஜனதா கட்சியின் உதகை சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் போஜராஜன் அவர்களை குன்னூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சாந்தி ராமு அவர்கள் பொன்னாடை போற்றி வாழ்த்து தெரிவித்தார் இந்நிகழ்ச்சியில் கோத்தகிரி நகர செயலாளர்நஞ்சு எ சுப்ரமணிகோத்தகிரி கிழக்கு ஒன்றிய செயலாளர்தப்பக்கபை கிருஷ்ணன் மற்றும் கழகத்தின் அனைத்து நிர்வாகிகள் உடன் இருந்தனர்




## திருப்பத்தூர் தொகுதி திமுக வேட்பாளர் வேட்புமனு தாக்கல்

திருப்பத்தூர் : ஏப். 05-


திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் அ.நல்லதம்பி இன்று திருப்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் கோட்டாட்சியரும் தேர்தல் அலுவலருமான வரதராஜனிடம் தனது வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் நகர செயலாளர் ராஜேந்திரன், காங்கிரஸ் மாவட்ட தலைவர் இளஞ்செழியன், விடுதலை சிறுத்தை கட்சியின் தேர்தல் பணிக்குழு மாநில செயலாளர் சுபாஷ், தமமுக தலைமை கழக பேச்சாளர் சனாவுல்லா, கழக உறுப்பினர்கள் இருந்தனர்.




■ நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் தேன்மொழி சேகர் தேர்தல் நடத்தும் அதிகாரி சுகுமாரன் தாசில்தார் ஜெயபிரகாஷ் அவர்களிடம் தனது வேட்புமனவை வழங்கினார் ஒன்றிய செயலாளர் யாகப்பன் ஒன்றிய செயலாளர் களஞ்சியம் மற்றும் ஏராளமான பொதுமக்கள் உடன் இருந்தனர்



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சட்டமன்ற பொதுத்தேர்தலில் பணியாற்ற உள்ள வாக்குச்சாவடி நிலைய தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை1, நிலை 2, நிலை3 அலுவலர்கள் ஆகிய முதற்கட்ட பயிற்சியில் கலந்துக்கொள்ளதா அலுவலர்களுக்கு நடைபெறும் பயிற்சி வகுப்புகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.




■ இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் பங்குனி உத்திர தேர் திருவிழாவினை முன்னிட்டுவசந்தபுரம் பகுதி தேவேந்திர குல வேளாளர் சங்கம் சார்பில் அருள்மிகு ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்பாளுக்கு பூமரக்கால் வைபவம் நடைபெற்றது.இந்நிகழ்வில் மதுரை கிளை உயர்நீதிமன்ற உத்தரவின்படி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட செந்தில் குமார் பாரம்பரிய முறைப்படி *ஊர் பொது* *பூமரக்காலை* சுமந்து சென்றது குறிப்பிடத்தக்கது. இதில் அப்பகுதி கிராம பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்யும் படிவங்கள் மற்றும் பாதுகாப்பு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்டாட்சியர் சின்னசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தேசிய ஜனநாயக கூட்டணி பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி ஐஜேகே வேட்பாளர் வழக்கறிஞர் வி.வெங்கடேசன் அவர்களுக்கு மிகச் சிறப்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது

பம்மல் ஏப். 05-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மலில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ப.தன்சிங் முன்னிலையில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் பம்மல் லயன் பிஆர்எஸ் சரவணராஜ் தலைமையில் செங்கல்பட்டு மாவட்டம் பம்மல் ரங்கன் சரசு மஹாலில் மலர் தூவி வரவேற்பு அளித்தனர் பின்பு

அ.தி.மு.க பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில்



ஆட்சி அமைய இரட்டை இலை சின்னதிற்கு வீடு வீடாக சென்று தின்னை பிரச்சாரம் செய்து அதிக வாக்குகள் வித்தியாசத்தில் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் ஐ.ஜே.கே . வேட்பாளர் வழக்கறிஞர் வெங்கடேசன் அவர்களை வெற்றி பெற செய்வதென உறுதியேற்றனர் இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட இலக்கிய அணி செயலாளர் த.முகுந்தன், வட்ட செயலாளர்கள் ஆர்.குமரன், எஸ்.சுரேஷ், அலங்கார் பாஸ்கர், பி.வின்சென்ட் விவேக், மாவட்ட அம்மா பேரவை துணைத்தலைவர் கே.கனிஅழகன், மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் டி.பன்னீர்செல்வம், பம்மல் வடக்கு பகுதி இணை செயலாளர் சுலோச்சனா, மாவட்ட மகளிர் அணி துணை திலகவதி முருகேசன் தலைவர், அனகை பகுதி எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலாளர் சி.ஜெய் கணேஷ், பம்மல் வடக்கு பகுதி இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் எஸ்.விக்னேஷ் பாண்டியன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண் பாசறை துணைத்தலைவர், கே.ஸ்ரீ விக்னேஷ், 6வது வார்டு கிளை கழக பூத் பொறுப்பாளர் கே.ஹரி குமரன், கழக பிரமுகர் பி.எஸ்.எஸ்.கோகுல் ராஜன், 6வது வார்டு கிளை கழக பூத் பொறுப்பாளர் சி.சதிஷ், மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்



# மானாமதுரையில் பாஜக வேட்பாளர் பொன் பாலகணபதி தேர்தல் பரப்புரை தொடக்கம்

## அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

மானாமதுரை:, ஏப்.5-

சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் போட்டியிடும் பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் பொன் பாலகணபதி, தனது அறிமுக தேர்தல் பரப்புரையை மானாமதுரையில் இன்று தொடங்கினார்.

அண்ணா சிலைக்கு மரியாதை

பரப்புரையை முன்னிட்டு, மானாமதுரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு பொன் பாலகணபதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து அவர் தனது தேர்தல் பிரசாரத்தை முறைப்படி ஆரம்பித்தார்.

கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்பு

இந்நிகழ்வின் போது வேட்பாளருடன் முக்கிய நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்:

* அஇஅதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்.
* நகரச் செயலாளர்கள்.
* தேசிய ஜனநாயக கூட்டணியின் பல்வேறு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள்.

இந்த அறிமுக பரப்புரையின் போது, கூட்டணி கட்சியினர் உற்சாகமாகப் பங்கேற்று வேட்பாளருக்கு ஆதரவு திரட்டினர். மானாமதுரை நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்ற இந்தப் பரப்புரை, அப்பகுதி மக்களிடையே பெரும் கவனத்தை ஈர்த்தது.

# மேற்கு வங்க தேர்தல் பாதுகாப்புக்காக 2.4 லட்சம் மத்திய ஆயுதப்படை போலீஸார்



புதுடெல்லி, ஏப்.5-

மேற்கு வங்க தேர்தல் பாதுகாப்புக்காக 2.4 லட்சம் மத்திய ஆயுதப்படை போலீஸார்(சிஏபிஎ்ஃப்) அனுப்பப்பட உள்ளனர்.


மேற்கு வங்க சட்டப் பேரவை தேர்தலை சுமுகமாக நடத்துவதற்கான பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் மேற்கு வங்க மாநில தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக 2.4 லட்சம் சிஏபிஎ்ஃப் போலீஸார் அனுப்பப்பட உள்ளனர் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இவர்கள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

மேற்கு வங்க மாநிலத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான மத்திய ஆயுதப்படை போலீஸார் பாதுகாப்புப் பணிகளுக்கு நியமிக்கப்பட உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து தேர்தல் ஆணைய மூத்த அதிகாரி ஒருவர் கூறும்போது, “மேற்கு வங்கத்தில் வரும் 29ம் தேதி 2ம் கட்டத் வாக்குப்பதிவு நிறைவடைந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையத்துக்கு பாதுகாப்பாக கொண்டு செல்லப்படும். வாக்கு எண்ணும் மையங்களுக்கு வெளியே சுமார் 200 கம்பெனி சிஏபிஎ்ஃப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவர்.

அதுமட்டுமல்லாமல் சுமார் 500 கம்பெனி சிஏபிஎ்ஃப் கம்பெனி படையினர், மாநிலம் முழுவதும் சட்டம்ஒழுங்கை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவர்.

அண்மையில் மால்டா மாவட்டத்தில் நீதித்துறை அதிகாரிகளை முற்றுகையிட்டு சில கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அதுபோன்ற பிரச்சினைகள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க பாதுகாப்புப் பணிகளை ஆயுதப் படை போலீஸார் மேற்கொள்வர். மாநிலம் முழுவதும் சுமார் 2.4 லட்சம் மத்திய ஆயுதப் படை போலீஸார் தீவிர பாதுகாப்புப் பணியில் இருப்பர். இதுதவிர மேற்கு வங்க மாநில போலீஸாரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவர்" என்றார்.

# அமெரிக்கா முன்மொழிந்த 48 மணி நேர போர் நிறுத்தம் ஈரான் நிராகரிப்பு!



தெஹ்ரான், ஏப்.5-

அமெரிக்கா முன்மொழிந்த 48 மணி நேர போர் நிறுத்தத் திட்டத்தை ஈரான் நிராகரித்துவிட்டதாக அந்நாட்டின் ‘ஃபார்ஸ்’ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிப்ரவரி 28ல் தொடங்கிய அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் பல வாரங்களாக நீடித்து வருகிறது. இந்தப் போரால் மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தியும் முடக்கப்பட்டதால், உலகம் முழுவதும் எரிபொருள் விலைகள் உயர்வதுடன், தட்டுப்பாடும் அதிகரித்துள்ளது.

இந்த சூழலில், 48 மணி நேர போர் நிறுத்தத்துக்கு ஒரு நட்பு நாட்டின் வாயிலாக, அமெரிக்கா கோரிக்கை வைத்ததாக தகவல் வெளியானது. ஆனால், இது குறித்து அமெரிக்காவிடமிருந்து எந்தக் கருத்தோ அல்லது உறுதிப்படுத்தலோ வெளியாகவில்லை. இந்த சூழலில், அமெரிக்கா முன்மொழிந்த 48 மணி நேர போர் நிறுத்தத் திட்டத்தை ஈரான் நிராகரித்துவிட்டதாக, ஈரானின் ‘ஃபார்ஸ்’ செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மத்திய கிழக்கின் தற்போதைய பதற்றமான சூழலுக்கு மத்தியில், ஈரானின் இந்த நிலைப்பாடு, போர் தொடர்ந்து கடுமையடைந்து வருவதை காட்டுகிறது. போரை நிறுத்துவதற்கான ராஜதந்திர முயற்சிகள் தோல்வியடைந்த அதே வேளையில், ராணுவ மோதல்களும் கடுமையாகத் தீவிரமடைந்துள்ளன.

இந்த நிலையில், நேற்று இரண்டு அமெரிக்க விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக ஈரான் அறிவித்தது. ஈரான் வான் பரப்பில் பறந்த அமெரிக்க விமானப் படையின் எப் 35 மற்றும் எப் 15 இ ரக போர் விமானங்களை நேற்று சுட்டு வீழ்த்தியதாக ஈரான் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு போர் விமானத்தில் இருந்து மீட்கப்பட்ட விமானி உயிருடன் இருப்பதாகவும், அவர் அமெரிக்கப் பாதுகாப்பில் வைக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாகவும் தகவல்கள் உறுதிப்படுத்தின. எனினும், இரண்டாவது விமானியின் நிலை என்ன என்பது குறித்து தெளிவு இன்னும் ஏற்படவில்லை.

# சென்னை ஸ்ரீ சைதன்யா பள்ளி தொடர்ந்து 15வது முறையாக உலக சாம்பியன் பட்டம் வென்றதுசாதனை

சென்னை ஏப்.05-

சென்னை ஸ்ரீ சைதன்யா பள்ளி தொடர்ந்து 15வது முறையாக உலக சாம்பியன் பட்டம் வென்றது

அமெரிக்காவின் ழிகிஷிகி ழிஷிஷி விண்வெளி தீர்வுப் போட்டி 2026 இல், ஸ்ரீ சைதன்யா பள்ளி

தொடர்ந்து 15வது ஆண்டாக மீண்டும் உலக சாம்பியனாக உருவெடுத்து, சாதனை எட்டியுள்ளது. இது

ஒரு குறிப்பிடத்தக்க வெற்றி.

இந்த உலகளாவிய போட்டியில் மொத்தம் 31 நாடுகள் பங்கேற்றன மேலும் 134 வெற்றிகரமான திட்டங்கள் உலகம் முழுவதும் அறிவிக்கப்பட்டது. இந்தியா வென்ற 80 விருதுகளில், 57 சிறந்த

விருதுகள் ஸ்ரீ சைதன்யா மாணவர்களால் மட்டுமே பெறப்பட்டன,

இந்தியாவின் மொத்த விருதுகளில் 71% வெற்றியை ஸ்ரீ சைதன்யா பள்ளி பெற்று சாதனை நிகழ்த்தி உள்ளது.

இந்த சாதனை குறித்து பேசிய ஸ்ரீ சைதன்யா நிறுவனங்களின் இயக்குனர் சீமா,

உலக அளவில் சாதனை படைத்த ஒரே கல்வி நிறுவனம் ஸ்ரீ சைதன்யா என்று கூறினார்

இந்த மைல்கல், வேறு எந்த நிறுவனமும் இதுவரை எட்டவில்லை.

வெற்றி பெற்ற 57 திட்டங்களும் ஸ்ரீ சைதன்யா பள்ளியால் மட்டுமே சாதிக்கப்பட்டது என்று அவர் மேலும் விளக்கினார்

சைதன்யா உட்பட உலக முதல் பரிசு: 6 திட்டங்கள், உலக 2வது பரிசு: 11 திட்டங்கள்

• உலக 3வது பரிசு: 10 திட்டங்கள்

• மரியாதைக்குரிய குறிப்புகள்: 30 திட்டங்கள்

இந்த 57 வெற்றிகரமான திட்டங்களில் 549 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று பங்களித்தனர்

இந்த மாபெரும் வெற்றி.

தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து மொத்தம் 13 வெற்றிகரமான திட்டங்கள் ஸ்ரீ சைதன்யா பள்ளியால் மட்டுமே சாதிக்கப்பட்டுள்ளன

ஸ்ரீ சைதன்யா பள்ளி உலக 1வது பரிசு: 1 திட்டம், உலக 3வது பரிசு: 5 திட்டங்கள் பெற்றுள்ளது.

சிறப்பு இடமாக: 7 திட்டங்கள் 1வது, 2வது மற்றும் 3வது பரிசுகளின் எண்ணிக்கையாக இருந்தாலும், மொத்த வெற்றிகரமான திட்டங்களாக இருந்தாலும் சரி ஸ்ரீ சைதன்யா பள்ளியில்

பங்கேற்கும் மாணவர்களின் அதிகப்படியான எண்ணிக்கை உலகில் உள்ள வேறு எந்த கல்வி நிறுவனத்திலும் இல்லை.

ஸ்ரீ சைதன்யா பள்ளியின் மாபெரும் சாதனை இந்திய அளவில் விரைவில் எட்டி விடும் என சீமா தெரிவித்துள்ளார் 30 நாடுகள் இணைந்து பங்கேற்றத்தில் 54 வெற்றி திட்டங்களை ஸ்ரீ சைதன்யா பள்ளி வென்றது, மேலும்

இந்தியாவிடமிருந்து மட்டும் 57 வெற்றிகரமான திட்டங்களைப் பெற்றுள்ளது, இது பெரும் பெருமைக்குரிய நிகழ்வாக அமைந்துள்ளது என கூறினார்.

சாதித்த மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் அவர்களை வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

# வானிலை முன்னறிவிப்பு: கோவை, நீலகிரி, ஈரோடு, தேனியில் கனமழை வாய்ப்பு



சென்னை, ஏப்.5-

தமிழகத்தில் கோவை, நீலகிரி, ஈரோடு, தேனி ஆகிய 4 மாவட்டங்களில் நாளை (ஏப்.5) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மரத்வாடா முதல் தென்தமிழகம் வரை உள் கர்நாடகா வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஏப்.5) தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 6ம் தேதி தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 7ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்காலிலும், 8 முதல் 10ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை (ஏப்.5) கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு மற்றும் தேனி மாவட்டங்களிலும், நாளை மறுநாள் விருதுநகர், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

வட தமிழகத்தில் நாளை முதல் 7ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அதிகரிக்கக்கூடும். தென்தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 80 டிகிரி ஃபாரன்ஹீட அளவை ஒட்டி இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்தியா வந்த டேங்கர் கப்பல் சீனா நோக்கி பாதை மாறியது

அகமதாபாத், ஏப்.5-

ஈரானிய கச்சா எண்ணெயுடன் இந்தியா நோக்கி வந்த டேங்கர் கப்பல் ஒன்று, குஜராத்தை நெருங்கிய பிறகு சீனா நோக்கி தனது பாதையை மாற்றியதாக கப்பல் கண்காணிப்பு தரவுகள் தெரிவிக்கின்றன.


தெற்கு ஆப்பிரிக்க நாடான ஈஸ்வதினி கொடியை ஏந்திய 'பிங் ஷுன்' என்ற டேங்கர் கப்பல் குஜராத்தின் வதினார் துறைமுகம் நோக்கி வந்துகொண்டிருந்தது.

சுமார் 6 லட்சம் பீப்பாய் ஈரானிய கச்சா எண்ணெயுடன் வந்த இந்தக் கப்பல் வியாழக்கிழமை பிற்பகல் நிலவரப்படி, வெள்ளிக்கிழமை அதிகாலை குஜராத் துறைமுகத்தை சென்றடையும் என்று குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில் குஜராத்தை மிகவும் நெருங்கிய பிறகு அந்தக் கப்பல் திடீரென தெற்கு நோக்கி திரும்பியது. செல்லவேண்டிய இடம் தொடர்பான தனது முந்தைய அறிவிப்பை மாற்றி, சீனாவின் ஷான்டாங் மாகாணத்தில் உள்ள டோங்கியிங்கை நோக்கி செல்வதாக குறிப்பிட்டிருப்பது சரக்குச் சந்தை பகுப்பாய்வு நிறுவனமான கெப்லரின் தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கெப்லர் நிறுவனத்தின் சுமித் ரிடோலியா கூறுகையில், “ஈரானிய கச்சா எண்ணெய் விஷயத்தில், பயணத்தின் நடுவில் இதுபோன்ற சேருமிட மாற்றம் ஏற்படுவது இது முதல் முறையல்ல. என்றாலும் பணம் செலுத்துதல் தொடர்பான சிக்கல்கள் தீர்க்கப்பட்டிருந்தால் அந்த சரக்கு ஒரு இந்திய சுத்திகரிப்பு நிலையத்துக்கு சென்றிருக்கும். இருப்பினும், சீனாவைத் தவிர மற்ற நாடுகளுக்கு ஈரானிய கச்சா எண்ணெய் பரிமாற்றங்களைத் தீர்மானிப்பதில், வர்த்தக விதிமுறைகளும் எவ்வளவு முக்கியமானதாக மாறி வருகின்றன என்பதை இந்த நிகழ்வு சுட்டிக்காட்டுகிறது” என்றார்

# சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட்களின் மறைவிடத்தில் ரூ.11 கோடி மதிப்பிலான சுவிஸ் தங்க கட்டிகள் பறிமுதல்



பிஜாப்பூர், ஏப்.5-

சத்தீஸ்கர் மாநில பஸ்தார் சரக ஐ.ஜி. சுந்தர்ராஜ் பட்டிலிங்கம் நேற்று கூறியதாவது: மாவோயிஸ்ட் முக்கியத் தலைவர் ரூபேஷ் சரணடைந்ததைத் தொடர்ந்து, கிளர்ச்சியாளர்களின் தளபதி பாப்பாராவ் என்பவருக்காகப் பெருமளவு ரொக்கம், தங்கம் பிஜாப்பூர் வனப்பகுதிக்கு மாற்றப்பட்டதாகத் தகவல் கிடைத்தது.

இதனடிப்படையில், கடந்த 10 நாட்களாக நடத்தப்பட்ட தீவிர விசாரணையைத் தொடர்ந்து, அடர்ந்த வனப்பகுதியில் உள்ள மாவோயிஸ்ட்களின் மறைவிடம் கண்டறியப்பட்டது.அங்கிருந்து சுவிஸ் முத்திரையுடன் கூடிய தங்க கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. சுமார் 7.2 கிலோ எடை கொண்ட இந்த தங்க கட்டிகளின் மதிப்பு ரூ.11.16 கோடி.

தங்கக் கட்டிகளில் சுவிஸ் முத்திரை இருப்பதுதான் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. தடயவியல் சோதனைகளுக்குப் பின்னரே இதன் தரம் மற்றும் உண்மைத் தன்மை குறித்துத் தெரிய வரும். இது தொடர்பாகத் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தான் நிலநடுக்கத்தில் 8 பேர் உயிரிழப்பு

காபூல், ஏப்.5-

ஆப்கானிஸ்தானின் இந்துகுஷ் பகுதியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் நேற்று இரவு 9.50க்கு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.9ஆக பதிவாகியுள்ளது. ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கம் பஞ்சாப், ஜம்முகாஷ்மீரில் பல இடங்களில் உணரப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

# மானாமதுரை தனித்தொகுதியில் பாஜக வேட்பாளராக பொன். பாலகணபதி அறிவிப்பு: தேர்தல் களம் தயார்



மானாமதுரை ஏப்.5-

2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை (தனி) தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் பொன். பாலகணபதி போட்டியிடுவார் என்று அக்கட்சியின் தலைமை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதிமுக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் இவர் களமிறக்கப்பட்டுள்ளதால், மானாமதுரை தொகுதியில் தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. யார் இந்த பொன். பாலகணபதி?கடந்த 26 ஆண்டுகளாக பாஜகவின் பல்வேறு நிலைகளில் தீவிரமாக பணியாற்றி வரும் பொன். பாலகணபதி, கட்சியின் நம்பிக்கைக்குரிய தலைவர்களில் ஒருவராகப் பார்க்கப்படுகிறார். இவரது அரசியல் பயணம் மற்றும் பின்னணி குறித்த முக்கிய விவரங்கள்: * கல்வி மற்றும் தொழில்: பி.இ. (Electronics and Communication Engineering) பட்டதாரியான இவர், தொழில் முனைவோராகவும் செயல்பட்டு வருகிறார்.

* அரசியல் அனுபவம்: 1999இல் பரமக்குடி நகர வார்டு தலைவராக தனது அரசியல் பயணத்தைத் தொடங்கியவர். பின்னர் மாவட்ட மற்றும் மாநில அளவில் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார். * முக்கிய பொறுப்புகள்: * மாநிலத் தலைவர் எஸ்சி அணி (20202021)

* மாநிலச் செயலாளர் பாஜக (2014 2019) * தற்போது மாநில பொதுச் செயலாளராக (2022 முதல்) பணியாற்றி வருகிறார்.

* தேர்தல் வரலாறு: 2024 நாடாளுமன்றத் தேர்தலில் திருவள்ளூர் தொகுதியில் போட்டியிட்டு இரண்டாம் இடத்தைப் பிடித்தார். மேலும், 2016 சட்டமன்றத் தேர்தலில் பரமக்குடி தொகுதியில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற்றவர்.

குடும்பப் பின்னணி: பொன். பாலகணபதியின் மனைவி மீனாட்சி, சென்னையில் சைபர் பிரிவில் காவல் கண்காணிப்பாளராக (SP) பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு ஹர்ஷ தேஜஸ்வனா (MBBS) மற்றும் பொன் முருகபூபதி (B.Sc. Economics) ஆகிய இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

முக்கிய நிகழ்வு:2013இல் இவர் ஒருங்கிணைத்த 'இளந்தாமரை மாநாடு' பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்நிகழ்வில் தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

பாஜகவின் இந்த அறிவிப்பால் மானாமதுரை தொகுதியில் தேர்தல் அரசியல் பரபரப்பு மேலும் அதிகரித்துள்ளது. தொகுதி மக்களிடையே நன்கு அறிமுகமான ஒருவரை வேட்பாளராக நிறுத்தியிருப்பது, மற்ற கட்சிகளுக்கு சவாலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161